# 2020-2021 ஆம் ஆண்டு
# வரவு–செலவுத் திட்டம் தொடர்பான
# வரவுகள் மற்றும் செலவுகளின்
# நிலை குறித்த ஆய்வு


## திரு ஓ. பன்னீர்செல்வம்

மாண்புமிகு துணை முதலமைச்சர்



பிப்ரவரி, 2021

மாசி, திருவள்ளுவர் ஆண்டு–2052

# 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம்–2003 (சட்டம் எண்.16/2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 2003 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6 (2) –ன் படி, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வு செய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வு முடிவுகளை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பார்.

இச்சட்டத்தின் பிரிவு 6 (3)–ன் படி ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும்:–

(அ) இச்சட்டத்தின்படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகள் (Obligations) நிறைவேற்றப்படுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ) அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தப்பட வேண்டிய வரவு–செலவுத் திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா, என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் தீர்வு நடவடிக்கைகள் (Remedial measures)

இதன் அடிப்படையில், 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல்

செப்டம்பர் 2020 வரையிலான ஆறுமாத காலத்திற்கான ஆய்வினை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

**<u>வருவாய் வரவுகளின் ஆய்வு:</u>**

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்

இ) மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

மத்திய அரசின் உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட

2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் 2,19,375 கோடி ரூபாயாகும். 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 67,400 கோடி ரூபாயாகும். இது 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான வருவாய் வரவுகளில் 30.72 சதவீதமாகும். இது 2019–2020 ஆம் ஆண்டில் இதே கால அளவில் பெறப்பட்ட வருவாய் வரவோடு ஒப்பிடும்போது 19.00 சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளது. மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த ஒப்பீட்டு விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

# 2020–2021 ஆம் நிதியாண்டின் முதல் ஆறு மாதத்திற்கான தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2019–2020 கணக்குகள் | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2019 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2020 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2019–2020 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2020–2021 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,07,462 | 1,33,530 | 52,428 | 38,426 | -26.71 | 28.78 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 12,888 | 15,899 | 5,260 | 3,281 | -37.62 | 20.64 |
| மத்திய வரிகளில் பங்கு | 26,392 | 32,849 | 12,520 | 9,720 | -22.36 | 29.59 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 27,783 | 37,097 | 12,998 | 15,973 | 22.89 | 43.06 |
| **மொத்தம்** | **1,74,525** | **2,19,375** | **83,206** | **67,400** | **-19.00** | **30.72** |

(அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:

2020 ஆம் நிதியாண்டின் செப்டம்பர் மாதம் வரையிலான முதல் ஆறு மாதங்களில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 38,426 கோடி ரூபாயாகும். இது 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 28.78 சதவீதமாகும். இது முந்தைய ஆண்டின் அதாவது 2019–2020 ஆம் ஆண்டு அதே கால அளவில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது 26.71 சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளதை காட்டுகின்றது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநில வரிகள் | 2019–2020 கணக்குகள் | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2019 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2020 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2019–2020 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2020–2021 ஆம் ஆண்டின் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| வணிக வரிகள் | 82,882 | 1,02,236 | 40,165 | 30,053 | -25.18 | 29.40 |
| மாநில ஆயத் தீர்வைகள் | 7,206 | 8,134 | 3,451 | 3,190 | -7.56 | 39.22 |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் | 10,856 | 14,435 | 5,393 | 3,586 | -33.51 | 24.84 |
| வாகனங்கள் மீதான வரிகள் | 5,675 | 6,898 | 2,829 | 1,495 | -47.15 | 21.67 |
| ஏனையவை | 843 | 1,827 | 590 | 102 | -82.71 | 5.58 |
| **மொத்தம்** | **1,07,462** | **1,33,530** | **52,428** | **38,426** | **-26.71** | **28.78** |

2017 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிமுறைகளின்படி

இவ்வரி அமலாக்கத்தினால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையை அளவு குறையாமல் மத்திய அரசு மாநில அரசிற்கு உறுதியாக வழங்க வேண்டும். இந்த இழப்பீட்டு தொகையானது, சில ஆடம்பர வகை மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மீது விதிக்கப்படும் மேல்வரியிலிருந்து உருவாக்கப்பட்ட 'பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டிற்கான நிதியத்திலிருந்து' விடுவிக்கப்படும். இவ்வாறு பெறப்படும் இழப்பீட்டுத் தொகை மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத்தின் ஒரு பகுதியாகும். மாநில வரிகளின் முக்கிய இனங்களில் **2020** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய், கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் பெறப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் **26.71** சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளதை காட்டுகிறது. கோவிட்–19 பெருந்தொற்று தோன்றலினால் நாடு முழுவதும்

அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தின் காரணமாக மாநில சொந்த வரிகளின் முக்கிய இனங்கள் அனைத்தும் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளன. அரசு மேற்கொண்டுள்ள பொருளாதார ஊக்க நடவடிக்கைகளால் இந்நிதியாண்டின் எஞ்சிய காலத்தில் இந்நிலை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் முன்னெடுப்பு நடவடிக்கையினால் ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் 2017–2018 ஆண்டிற்கான நிலுவை தொகையான 4,321 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

கோவிட்–19 பெரும் தொற்றினால் ஏற்பட்டுள்ள வருமான இழப்பினை, பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மதிப்பு கூட்டு வரியினை குறிப்பிட்ட விகிதத்துடன் கூடிய பெருமான வரி முறையாக மாற்றி மறுகட்டமைப்பு

செய்தது மற்றும் மதுபானங்கள் மீதான ஆயத் தீர்வையினை உயர்த்துதல் போன்ற வரி வசூலினை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் வருவாய் குறைபாட்டை ஈடுசெய்யவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**(ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்:**

2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான 15,899 கோடி ரூபாயில், 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய் 3,281 கோடி ரூபாயாகும். இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயைக் காட்டிலும் 37.62 சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளதை காட்டுகிறது. இது 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 20.64 சதவீதமாகவும் உள்ளது. கோவிட்–19 பெரும் தொற்றின் காரணமாக நடைமுறைபடுத்தப்பட்ட அனைத்து பொருளாதார

நடவடிக்கையின் மீதான பொது முடக்கத்தினால், 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாயில் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு:**

பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, மத்திய அரசின் பொது வகுக்கப்பட்ட வரிகளில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கில் தமிழகத்தின் பங்கு 4.023 சதவீதத்திலிருந்து 4.189 சதவீதமாக உயர்ந்துள்ளது. பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையினால், 2019–2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 26,392 கோடி ரூபாய்க்கு எதிராக 2020–2021–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு வருவாய் 32,849 கோடி ரூபாயாக

மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு வருவாய் 6,457 கோடி ரூபாய் அளவு அதிகரிக்கும் என எதிர்பாக்கப்பட்டது. எனினும், செப்டம்பர் 2020 வரை 9,720 கோடி ருயாய் மட்டுமே பெறப்பட்டுள்ளது. கோவிட்–19 பெரும் தொற்றின் விளைவாக மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு வருவாய் வெகுவாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்:**

2020–2021 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்கள் உள்ளிட்ட, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் 37,097 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டதில், 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 15,973 கோடி ரூபாய் வரப்பெற்றுள்ளது. இது, 2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்ட

உதவி மானியத்தில் 43.06 சதவீதமாகும். இதே காலகட்டத்தில் முந்தைய ஆண்டு மத்திய அரசிடமிருந்து / வரப்பெற்ற உதவி மானியம் 12,998 கோடி ரூபாயாகும். மத்திய அரசிடமிருந்து நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கான உதவி மானிய தொகையை உரிய காலத்தில் பெறுவதற்காக மாநில அரசால் எடுக்கப்பட்ட சீரிய முயற்சியால், இந்த ஆண்டு 22.89 சதவீத அளவு ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு வகைமுறை 2014–2015–ஆம் ஆண்டு முதல் முறைப்படுத்தப்பட்டதாலும், திருத்தப்பட்டதாலும் அத்திட்டங்களுக்கு தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து அதிகமான நிதியை மாநில அரசு ஒதுக்க வேண்டியுள்ளது. உதவி

மானியங்களில் மத்திய அரசிடமிருந்து முந்தைய ஆண்டுகளில் விடுவிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான வரவுகளைப் பெறுவதற்கு, குறிப்பாக, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு நிலுவைத் தொகை, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் பெறப்பட வேண்டிய உதவித்தொகை ஆகியவற்றை பெறுவதற்கு இந்த அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. எனினும் இந்நிதியாண்டில் பொருட்கள் மற்றும் சேவைவரிக்கான இழப்பீட்டு தொகைக்கான மேல்வரி வசூலில் எற்பட்டுள்ள பற்றாக்குறையினால், மத்திய அரசானது இழப்பீட்டு தொகையின் ஒரு பகுதியை மானியத்திற்கு பதிலாக கடனாக வழங்குகிறது.

மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மானியம் பெறப்படாவிடில் தமிழ்நாட்டின் நிதிநிலைமை தீவிர

பாதிப்பிற்குள்ளாகும் என்ற காரணத்தினால் சரியான நேரத்தில் மானியங்களை மத்திய அரசிடமிருந்து பெற அரசுத் துறைகளுக்கு/ தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் எட்டப்படுவதுடன், சாத்தியப்படின் மதிப்பீட்டைவிட அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## செலவினங்கள் குறித்த ஆய்வு

### (அ) வருவாய்க் கணக்கு செலவினம்

2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கு செலவினங்கள் **2,40,993** கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. **2020** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் **90,991** கோடி ரூபாயாகும். இது, வருவாய்க் கணக்கு செலவினங்களுக்கான வரவு செலவுத் திட்ட

ஒதுக்கீட்டில் 37.76 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட வருவாய்க் கணக்கு செலவினம் 96,014 கோடி ரூபாய். இது 2019–2020–ஆம் ஆண்டு கணக்குகளில் 45.63 சதவீதமாகும். 2020–2021 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 5.23 சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினப் போக்கின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய்ச் செலவினங்கள் | 2019–2020 கணக்குகள் | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2019 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2020 வரையிலான செலவினம் | 2019–2020 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2020–2021 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 57,829 | 64,209 | 30,567 | 31,608 | 3.41 | 49.23 |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 27,403 | 32,009 | 15,864 | 13,982 | -11.86 | 43.68 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 10,996 | 13,531 | 3,425 | 4,709 | 37.49 | 34.80 |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 81,241 | 94,100 | 33,387 | 26,991 | -19.16 | 28.68 |
| வட்டி செலுத்துதல் | 32,940 | 37,120 | 12,758 | 13,695 | 7.34 | 36.89 |
| ஏனையவை | 25 | 24 | 13 | 6 | -53.85 | 25 |
| **மொத்தம்** | **2,10,434** | **2,40,993** | **96,014** | **90,991** | **-5.23** | **37.76** |

## (ஆ) மூலதனச் செலவினம்

2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மூலதனச் செலவினத்திற்காக 36,368 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 7,435 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது, மூலதனக் கணக்கு செலவினங்களுக்கான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 20.44 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட மூலதனக் கணக்கு செலவினம் 9,211 கோடி ரூபாய். 2020–2021 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான மூலதனக் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 19.28 சதவீதம் எதிர்மறை வளர்ச்சியடைந்துள்ளது. மூலதனச் செலவுகளுக்கான பல்வேறு பணிகளை

மேற்கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வரும் மாதங்களில், மூலதனப் பணி செயலாக்கத்தின் வேகம் அதிகரிப்பதோடு ஒதுக்கப்பட்ட நிதியும் சரியான முறையில் பயன்படுத்தப்படும்.

**ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்**

வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதற்கான காலத்தினை 2021–2022 ஆம் ஆண்டிற்கு நீட்டித்து, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில், 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மாநில அரசு திருத்தம் மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து, கோவிட்–19 பெரும் தொற்றினால் மாநில அரசுகளுக்கு வருவாய் வரவினங்களில் ஏற்பட்டுள்ள கடும் பற்றாக்குறை மற்றும் கூடுதல்

செலவினத்தினை கருத்தில் கொண்டு மத்திய அரசு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2 சதவிகித அளவு கட்டுப்பட்ட மற்றும் கட்டுபடா கூடுதல் கடனினை பெற மாநில அரசினை அனுமதித்தது. இக்கூடுதல் கடனை பெறுவதற்கு மாநில நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு மத்திய அரசு ஆணையிட்டது. எனவே தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில், 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், மாநில அரசு திருத்தம் மேற்கொண்டது. இத்திருத்தப்பட்ட சட்டப்படி, மாநில அரசு 2021–2022 ஆம் ஆண்டில் நிதிப்பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரிக்கப்பட வேண்டும். முந்தைய ஆண்டுகளில் அரசு நிதிப்பற்றாக்குறையினை 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட மாநில மொத்த உற்பத்தி மதிப்பில்

3 சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரித்து வந்தது. கோவிட்–19 பெரும் தொற்றினால் ஏற்பட்டுள்ள வருவாய் பற்றாக்குறை மற்றும் கூடுதல் செலவினத்திற்காக கூடுதல் கடனை பெறுவதால், நிதிப் பற்றாக்குறை 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டதில் மதிப்பிடப்பட்டதை விட அதிகரிக்கும்.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின் ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

# நடப்பு ஆண்டின் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2020,செப்டம்பர் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | 2,19,375 | 67,400 |
| வருவாய் செலவினம் | 2,40,993 | 90,991 |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | -21,618 | -23,591 |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | 37,728 | 7,614 |
| மொத்தச் செலவினம் | 2,78,721 | 98,605 |
| நிதிப் பற்றாக்குறை | -59,346 | -31,205 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | 2,09,19,26 | 2,09,19,26 |
| (%) | | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | --- | --- |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | -9.85 | -35.00 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | <3.00 | --- |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | 2.84 | 1.49 |

<u>நிதிநிலைக் குறியீடுகள் ஆய்வு</u>

கோவிட்–19 பெரும் தொற்று பாதிப்பினால் 2020–2021 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத வரவுகள், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைவிட வெகுவாக மாறுபட்டுள்ளது. ஆனால், மாநில அரசு, அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதினை 58 இருந்து59 ஆக உயர்த்துதல், ஜனவரி 2020 முதல் ஜூலை 2021 வரையிலான காலத்திற்கு அகவிலைப்படி உயர்வை நிறுத்தி வைத்தல், விடுப்பு ஒப்படைப்புக்கான பணப்பயனை ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்தல் மற்றும் வளர்ச்சி அல்லாத செலவினங்களைக் குறைத்தல் போன்ற செலவின கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இவ்வாண்டின் முதல் ஆறு மாத கால செலவு ஓரளவே குறைந்துள்ளது. இதற்கு பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு

வசதிகளை ஏற்படுத்தவும், தொற்று பரவாமல் கட்டுபடுத்தும் நடவடிக்கைகளுக்காகவும், ஏழை மற்றும் நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தை காக்கும் சமூக நடவடிக்கைகளுக்காகவும் அரசின் செலவினம் அதிகரித்ததே காரணமாகும்.

கோவிட்–19 பெரும் தொற்று தோன்றலையடுத்து 24 மார்ச் 2020 முதல் நடைமுறைபடுத்தப்பட்ட பொது முடக்கத்தினால் மாநிலத்தின் சொந்த வருவாய் இனங்களான வணிக வரி, பத்திர பதிவு (ம) முத்திரைத் தாள் மற்றும் மோட்டார் வாகன வரி வரவுகள் இந்நிதியாண்டின் முதல் காலாண்டில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. மேலும் மத்திய அரசு வரிகள் மற்றும் தீர்வைகளின் வசூல் குறைந்ததையடுத்து 2020–2021–ஆம் ஆண்டிற்கான மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு ஒதுக்கீட்டினை குறைத்துள்ளது.

இது வரவு மற்றும் செலவு இடைவெளியை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. எனவே வரவு செலவு திட்டத்தில் மதிப்பிடப்பட்ட வருவாய் பற்றாக்குறை 21,618 கோடி ரூபாய்க்கு மாறாக செப்டம்பர் 2020 வரையான வருவாய் பற்றாக்குறை 23,591 கோடி ரூபாயாக உள்ளது. இந்நிதியாண்டின் இரண்டாம் அரையாண்டில் இது மேலும் அதிகரிக்கக்கூடும்.

கடுமையான நிதிநிலையிலும் மாநில அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு உலகளவில் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்துள்ள நிலையில், செலவினங்களைக் குறைப்பதன் மூலம் நிதிநிலையைக் கட்டுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சியில் மேலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, இந்த அரசு உரிய

கவனத்துடன் வளர்ச்சியை அதிகரிக்கும் செலவினங்கள் சரியான அளவில் இருந்து குறைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். ஆகவே, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள வருவாய் பற்றாக்குறை மற்றும் நிதிப்பற்றாக்குறைகளுக்கான இலக்குகளை அடைவதற்கான காலத்தை 2021–2022–ஆம் ஆண்டிற்கு நீட்டித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) கூறப்பட்டுள்ளதற்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம் ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது.

**2020–2021** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் மாநிலத்தின் உண்மையான நிதிநிலையை எடுத்துரைக்கிறது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**

*********

## பின்னிணைப்பு

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2003–2004 கணக்குகள் | - 20.28 | - 1565.24 | - 6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| 2004–2005 கணக்குகள் | - 17.28 | -703.34 | - 2.47 | 3.76 | 5569.76 | 2.54 |
| 2005–2006 கணக்குகள் | - 14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.87 |
| 2006–2007 கணக்குகள் | - 11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.27 |
| 2007–2008 கணக்குகள் | - 8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.05 |
| 2008–2009 கணக்குகள் | < - 5.00 | 1452.25 | 2.64 | < 3.00 | 8547.76 | 2.13 |
| 2009–2010 கணக்குகள் | ** | - 3531.22 | - 6.32 | < 4.00 | 11807.26 | 2.46 |
| 2010–2011 கணக்குகள் | < - 5.00 | - 2728.69 | - 3.89 | < 4.00 | 16646.62 | 2.85 |
| 2011–2012 கணக்குகள் | 0 / உபரி நிலை | 1364.10 | 1.60 | < 3.00 | 17274.08 | 2.30 |
| 2012–2013 கணக்குகள் | 0 / உபரி நிலை | 1760.27 | 1.78 | < 3.00 | 16518.99 | 1.93 |
| 2013–2014 கணக்குகள் | < - 5.00 | - 1788.24 | - 1.66 | < 3.00 | 20583.49 | 2.12 |

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2014–2015 கணக்குகள் | ** | - 6407.56 | - 5.23 | < 3.00 | 27162.44 | 2.49 |
| 2015–2016 கணக்குகள் | ** | - 11985.35 | - 9.29 | < 3.00 | 32627.56 | 2.69 |
| 2016–2017 கணக்குகள் | ** | - 12964.13 | - 9.24 | < 3.00 | 56171.35 | 4.20 |
| 2017–2018 கணக்குகள் | ** | - 21593.88 | - 14.76 | < 3.00 | 39839.51 | 2.76 |
| 2018–2019 கணக்குகள் | < - 5.00 | - 23459.45 | - 13.50 | < 3.00 | 47,334.90 | 2.97 |
| 2019–2020 கணக்குகள் | ** | - 35908.82 | -20.57 | < 3.00 | 60178.64 | 3.24 |
| 2020–2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | ** | - 21617.64 | -9.85 | < 3.00 | 59346.39 | 2.84 |

** இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.